## இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை - 2017

---

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

நியமத்தின் 41 மற்றும் 42 ஆம் பந்தியின் பிரகாரம், முக்கியமான முன்னைய காலப்பகுதி பிழைகள் கணக்குகளில் தொடர்ச்சியாக சரி செய்யப்பட வேண்டும். இதற்கு முரணாக, அதிகாரசபையால் 2006 - 2015 ஆம் காலப்பகுதியுடனான பங்களிப்புக்கள் தொடர்பில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 67,746,000 தொகையானது நிதிச்செயலாற்றல் கூற்றில் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் அதனால், ஆண்டின் பற்றாக்குறை அதேதொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத்தேய்வானது அது பயன்படுத்துவதற்கு தயாராகும் போது ஆரம்பிக்க வேண்டும். இதற்கு முரணாக, கொள்வனவு செய்யும் முழு ஆண்டுக்காக பெறுமதி தேய்வு செய்யப்பட்டது என பெறுமானத்தேய்வு கொள்கை இனங்கண்டிருந்தது.

(ii) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தின் குறைந்து செல்லும் பெறுமதி மற்றும் பயன்பாட்டுக் காலம் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மதிப்பாய்வு செய்ய வேண்டும். ஏதும் வித்தியாசம் ஏற்படில் இது கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றங்களாக வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையானது எந்தவொரு திருத்தங்களையும் மேற்கொண்டிருக்காததுடன் கணக்கீட்டுக் கொள்கையானது நியமத்தின் பிரகாரம் குறிப்புக்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம், அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கணக்கீடானது கிரய முறைமை அல்லது மீள்மதிப்பீடு முறைமையில் தெரிவு செய்யப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையானது கணக்கீடு செய்யும் போது கணக்கீட்டுக் கொள்கைகளாக இரண்டு முறையும் இனங்கண்டிருந்தது.

(iv) மீள்மதிப்பிடப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது அதனுடைய கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து வேறுபடுகின்ற போது நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் மேலதிக மீள்மதிப்பீடு வேண்டப்படுகின்றது. அவ்வாறான எந்தச் சொத்துக்களும் 2008 ஆம் ஆண்டிலிருந்து மீள்மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 18**

சேவை வழங்கும் நிறுவனத்தால் உழைக்கப்பட்ட செயற்பாட்டு வருமானத்தை இனங்காணலில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையானது நியமத்தின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிடப்பட்டவாறு விரிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், பகுதி நேர பயிற்சி பாடநெறியை இனங்காணல் மீதான கணக்கீட்டுக் கொள்கையானது நியமத்தால் வேண்டப்பட்டவாறு இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 19**

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ஊழியர் பணிக்கொடைப் பொறுப்புக்களானது எதிர்பார்க்கப்பட்ட அலகுக் கிரய முறைமையின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால், அதிகாரசபையானது ஊழியர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடந்த சம்பளம் மற்றும் சேவைக் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பீடு செய்திருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரியிலிருந்து 2015 மே வரையான காலப்பகுதியின் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 27,021,229 தொகை மற்றும் ஊழியர்கள் பங்களிப்பாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 6,755,307 தொகை மற்றும் அதற்குரிய மிகையறவீட்டு கட்டணமான ரூபா 13,539,553 தொகை மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 72,261,572 ஊழியர்கள் பங்களிப்புக்கள் போன்றவற்றை உள்ளடக்கி ரூபா 119,577,661 கூட்டுத்தொகையான செலவீனம் செலுத்த வேண்டியவைகளாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 07 சேவை உடன்படிக்கைகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 254,364 செலவினங்கள் மற்றும் ரூபா 423,750 செலவினங்களை 2016 ஆம் ஆண்டின் போது அட்டுறு செலவினங்களாக இனங்காணப்பட்டிருக்காததுடன் 2017 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை மீளாய்வாண்டின் செலவினங்களாக கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) பொதுவில் மற்றும் றொக்கில் தொழில்சார் பயிற்சி நிலையங்களின் நவீனமயப்படுத்தலானது பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் தொடர்புடைய செலவினங்களானது மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும், நவீனமயப்படுத்தல் தொடர்பில் வேறு சில இடங்களிற்கு மூன்று கட்ட மீற்றர்களை மாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட செலவினம் ரூபா 240,470 நடைபெற்றுக்கொண்டிருக்கும் கணக்குகளிலிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்த வேலையின் பிரகாரம், ஹோடாகவெல தொழில்சார் பயிற்சி நிலையத்தில் மோட்டார் இயந்திர பயிற்சிப் பட்டறையின் கூரை மற்றும் சட்டகத்தின் திருத்த வேலைகளானது 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 278,887 தொகை செலவினம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய சொத்துக்கள் கணக்கிற்கு மூலதனமாக்கப்படாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) பன்னப்பிற்றிய பயிற்சி நிலையத்தில் பாடநெறியொன்றை தொடங்குவதற்காக உலோக வில்லையை தயாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ரூபா 93,500 தொகை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

ஊழியரொருவரால் அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்கு தொடர்பில் ரூபா 3,227,737 தொகையை செலுத்துவதற்கு 2018 ஆகஸ்ட் 23 இல் ஊழியர் நியாய சபையால் கொடுக்கப்பட்ட தீர்மானம் மீது கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதற்கான ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, அதிகாரசபைக்கு எதிராக ஊழியர்களால் தொடுக்கப்பட்ட 07 நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் ஊழியர் ஒருவருக்கு எதிராக அதிகாரசபையால் தொடுக்கப்பட்ட வழக்கொன்று தொடர்பிலும் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்சார் பயிற்சி மற்றும் கிராமிய கைத்தொழிலக்ள அமைச்சிடமிருந்தும் தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையிடமிருந்தும் முறையே 17 வருடங்களிற்கு மேலாகவும் 14 வருடங்களாகவும் பெறவேண்டிய ரூபா 3,548,335 மற்றும் ரூபா 527,436 கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூடப்பட்ட லக்சலாவிடமிருந்து பெறவேண்டிய 12 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்த ரூபா 1,437,200 மீதியானது அறவிட வேண்டியிருந்தது. அதிகாரசபையின் தலைவரானவர் மேற்கூறப்பட்ட பந்தி (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பெற வேண்டிய மீதிகள் அறவிடமுடியாததாகவிருந்ததென எனக்கு அறிவித்திருந்ததுடன் திறைசேரியின் அனுமதியானது அத்தகைய மீதிகளை பதிவழிப்புச் செய்வதற்காகவிருந்தது.

(இ) காலி மாவட்ட செயலகத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 11,732 தொகையான வருமானப் பற்றாக்குறையானது மீளாய்வாண்டு இறுதிவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களின் கொள்வனவு தொடர்பில் தனியார் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,875,747 தொகை பெறுகை செய்முறையிலுள்ள குறைபாட்டால் மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2004 இலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை 10 உத்தியோகத்தர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 111,871 தொகையான விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்திற்கான பங்களிப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களினதும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 188(2) | 2009 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 49,644 தொகையான 2 காசோலைகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தேறாதிருந்த போதிலும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 272(3) | ரூபா 4,651,292 தொகையான 13 கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகள் மற்றும் தொடர்புடைய சிட்டைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 502(2) | நிலையான சொத்துக்களின் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடானது நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அதிகாரசபையின் தலைவரானவர் நிலையான சொத்துக்களில் புதிய கணனி மயப்படுத்தப்பட்ட பதிவேட்டின் தயார்ப்படுத்தலானது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்ததுடன் அதன் வேலையின் 90 சதவீதம் 2018 செப்தெம்பர் 18 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என அறிவித்திருந்தார். |
| (v) நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 8,817,754 தொகையான பிடிகாசு மற்றும் ரூபா 584,996 தொகையான மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகைகளை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீ/எவ்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியமொன்றை தாபிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதும் காப்புறுதி நிதியமொன்றை தாபிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 வரை பயிலுநர்களிடமிருந்து ரூபா 500 படி சேகரித்து ரூபா 37,883,500 தொகை அதிகாரசபையின் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டதுடன், ஒரு வருடத்தினுள் அவற்றில் சுமார் ரூபா 507,000 நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) (i) மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 12 பாடநெறிகளை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையின் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையுடன் 2015 செப்தெம்பர் 04 இல் உதவியாக ரூபா 32,229,600 தொகையான மானிய உடன்படிக்கையில் சர்வதேச ஊழியர் அமைப்பு உடன்படிக்கையொன்றில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும், வெளிநாட்டு உதவியை வழங்குவது தொடர்பில் 1994 ஏப்ரல் 20 இன் 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பந்தி 2 இன் பிரகாரம் திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) இதற்கு மேலதிகமாக, சர்வதேச ஊழியர் அமைப்பால் வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவி சுற்றறிக்கையின் 4.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய அமைச்சின் செலவினத் தலைப்பினூடாக செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பந்திக்கு முரணாகவும் திறைசேரியின் அனுமதியில்லாமல், பதவியணி உத்தியோகத்தர்களிற்காக நாளொன்றிற்கு ரூபா 2,500 வீதமும் ஏனைய உத்தியோகத்தர்களிற்காக நாளொன்றுக்கு ரூபா 2,000 வீதமும் இயக்குனர் சபையின் அனுமதி மீது கள கடமைகளை மேற்கொண்டோருக்கு இரவு வதிவிட வசதிகளை வழங்குவதற்காக இணைப்பு படிகளாக வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 132,115,206 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 33,280,068 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 165,395,274 ஆன பின்னடைவொன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் மானியங்களின் தொகை ரூபா 24,900,000 ஆல் அதிகரித்திருந்ததுடன் அமைச்சிடமிருந்து ரூபா 124,146,500 தொகையான மீண்டெழும் மானியம் பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 146,925,569 ஆல் ஏனைய வருமானம் குறைவடைந்ததமை, ரூபா 149,189,026 ஆம் ஆண்டின் வேதனம் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட பின்னடைவுக்கு காரணமாக இருந்தது.

நடப்பாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2016 இல் நிதி மிகையும் ஏனைய ஆண்டுகளில் பற்றாக்குறையையும் காண்பித்தது. ஆதன வேதனம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொண்ட பின்னர் நிறுவனத்தின் பங்களிப்பு 2013 இல் 1,023,595,450 தொகையானதுடன் 2017 ஆம் ஆண்டில் இது ரூபா 1,438,489,867 ஆகவிருந்தது. அதிகாரசபையின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டு வரை அதிகரித்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 31,818,127 ஆல் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 4.1 செயலாற்றல்

-------------------------

#### 4.1.1 திட்டமிடல்

---------------------

(அ) அதிகாரசபையால் 2014 - 2018 ஆம் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நோக்கமானது அதிகாரசபையின் திறன்கள் அடிப்படையிலான பதவியுயர்வுகள் மற்றும் உத்தியோகத்தர்கள் படிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட திறமைகளை உள்ளடக்கிய 2017 ஆம் ஆண்டில் முடிவடைந்த ஆண்டிற்கான மனித வளத்திட்டமானது தயாரிக்கப்படுவதாகும். இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அறிவுறுத்தாரர்களின் தகைமை மட்டம் தொடர்பில் தரவுத்தளமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையானது பல வருடங்களிலிருந்து ஊழியர் சந்தையின் கேள்வி மற்றும் வழங்கல் தொடர்பில் முறையான அளவைகளை நடாத்தியிருக்காததுடன் சர்வதேச தொடர்புகளை மேற்கொள்வதற்கு கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது 19 துறையுடன் தொடர்பாக 1,544 பாடநெறிகளிற்கும் முழுநேர மற்றும் பகுதி நேர 2663 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காகவும் 37,239 பயிற்றுவிப்பாளர்களை சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன் 19 துறைகளிலுள்ள 2,094 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் 36,695 பயிற்றுவிப்பாளர்கள் அதற்காக சேர்க்கப்பட்டிருந்தார்கள். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|
| | பயிற்றுவிப்பாளர்களை சேர்ப்பதற்காக இலக்கிடப்பட்ட எண்ணிக்கை | உண்மையாக சேர்க்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கை | பயிற்றுவிப்பாளர்களை சேர்ப்பதற்காக இலக்கிடப்பட்ட எண்ணிக்கை | உண்மையாக சேர்க்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கை |
| - தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் | 7,890 | 7,439 | 8,440 | 9,360 |
| - ஆளணி மற்றும் சமூகம் | 3,930 | 4,453 | 4,875 | 5,436 |

| | | | | |
|---|---|---|---|---|
| - துணி மற்றும் ஆடைகள் | 4,840 | 3,842 | 4,630 | 4,276 |
| - இலத்திரனியல், மின்னியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் | 3,850 | 3,316 | 3,790 | 3,695 |
| - கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 3,630 | 3,091 | 3,655 | 3,692 |
| - மிகுதி 14 துறைகள் | 11,320 | 9,396 | 11,849 | 10,236 |
| | ----------- | ----------- | ----------- | ----------- |
| மொத்தம் | 35,460 | 31,537 | 37,239 | 36,695 |
| | ===== | ===== | ===== | ===== |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2017 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட சேர்க்கைகளானது 1,779 ஆல் அதிகரித்திருந்ததுடன், அதில் 1,495 ஆனது தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆனணி அபிவிருத்தி (அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரம்) போன்றவற்றில் அதிகரித்திருந்தது. ஆனால் பிரதான தொழில்சார் கற்கைகளில் அது இருக்கவில்லை. அதற்கிணங்க, அதிகாரசபையானது ஊழியர் சபை வேண்டுதலிற்கிணங்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பயிற்றுவிப்பாளர்களின் சேர்க்கையானது 5,158 ஆல் அல்லது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பாடநெறிகளிலிருந்து விட்டுச் செல்லலானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 04 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது, இலக்கை விஞ்சி தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆளணி அபிவிருத்தி பாடநெறிகளிற்காக 920 பயிற்றுவிப்பாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அரச கொள்கைகளின் பிரகாரம், அனைத்து பாடநெறிகளிற்கான கட்டணங்களிலிருந்து விடுதலை செய்தலானது அதற்கும் ஏற்படுத்தப்பட்டிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) அறிவுறுத்தாளர்கள் மற்றும் சம்பவங்கள் போதியளவில் இல்லாமையால், முழுநேர பயிற்சி பாடநெறிகளிற்குரிய 354 நிகழ்ச்சித்திட்டங்கள், பகுதி நேர பாடநெறிகளிற்குரிய 215 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அதில் 56 மற்றும் 52 நிகழ்ச்சித்திட்டங்களானது உயர்ந்த கேள்வி துறைகளான மோட்டார் வாகன திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு மற்றும் கட்டிட நிர்மாணங்களாகவிருந்தன.

(iv) மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட ஹொட்டல் மற்றும் சுற்றுலா, உருக்கு மற்றும் வெளிச்ச பொறியியல், கடற்றொழில் மற்றும் நீரியல்வள கலாச்சார பயிரிடல் போன்ற பகுதி பாடநெறிகள் அறிவுறுத்தாளர்கள் இல்லாமை மற்றும் போதியதற்ற கொடுப்பனவுகளால் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(v) தளபாடம் சம்பந்தமான பொருட்கள், மாணிக்கம் மற்றும் தங்கநகை அச்சிடல் மற்றும் பொதியிடல், உருக்கு மற்றும் வெளிச்ச பொறியியல் மற்றும் உரிய தோல்பொருள் பாதணிப் பொருட்கள் போன்றன தொழில்சார் பயிற்சி துறைகளுக்கான உட்சேர்த்தல்களை அதிகரிப்பதற்கும் சமூக தேவைகளின் பிரகாரம் புதிய பரப்புக்களை அறிமுகஞ் செய்வதற்கும் அதிகாரசபையானது கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(vi) மன்னார் மற்றும் முல்லைத்தீவின் மாவட்ட நிலையங்களிலுள்ள மட்டக்களப்பு, பெத்தகம மற்றும் மிர்யாவிலுள்ள தேசிய நிலையங்களிலுள்ள பாடநெறிகளின் எண்ணிக்கையும் உட்சேர்த்தல்களும் அத்தகைய நிலையங்களின் இயலளவுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த மட்டத்திலிருந்ததுடன் அத்தகைய மாவட்டங்கள் மற்றும் தேசிய நிலையங்களின் உட்சேர்க்கைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லையெனவும் அவதானிக்கப்பட்டது.

(vii) அம்பாறை மாவட்டங்களில் 289 எண்ணிக்கையான பாடநெறிகளானது கைவிடப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் இது மொத்த சேர்க்கைகளின் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

**(ஆ) வேலை இடஅமர்த்தல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் அவதானிப்புக்கள்**

---

(i) 2017 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட வேலை இடமாத்தல்கள் (Job placements) 8,300 எண்ணிக்கையானதுடன் அதில் உண்மையான இடமர்த்தல்களின் எண்ணிக்கை 6,661 ஆகும்.

(ii) 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் வேலை இடமாத்தல்களானது 28 சதவீதத்தால் குறைவடைந்தது. வெளிநாட்டு வேலைச் சந்தையை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு வேலை அமர்த்தல்களை அதிகரிப்பதற்கு அதிகாரசபையில் முறையான முறைமை இல்லாதிருந்ததுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமர்த்தல்களானது ஒட்டுமொத்த வேலை அமர்த்தில்களின் 02 சதவீதமாக குறைந்த மட்டத்திலிருந்தது.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு வேலை அமர்த்தல்களானது 6 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 23 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

(iv) துறை ரீதியிலான வேலை அமர்த்தல்களின் பிரகாரம், முன்னுரைகளின் உயர் இடமானது இலத்திரனியல், மின்சாரவியல் மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் 971 சதவீதத்தை பிரநிதித்துவப்படுத்துவதுடன் ஒது ஒட்டு மொத்த வேலை அமர்த்தல்களின் 15 சதவீதமாகவிருந்தது. எனினும், மாணிக்கம் மற்றும் நகை, அச்சிடல் மற்றும் பொதியிடல், கடற்றொழில்கள் மற்றும் நீரின பயிரிடல், தோல் தொடர்பான பொருட்கள் துறைகளில் வேலை அமர்த்தலானது ஒட்டுமொத்த வேலை அமர்த்தல்களில் ஒரு சதவீதத்தை விட குறைவாகவிருந்தது. அத்தகைய துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகள் காலரீதியான தேவைப்பாடுகளிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்காததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) அதிகாரசபையின் பயிற்சியிலிருந்து வெளிச்சென்ற பயிற்சியாளர்களின் வேலை அமர்த்தல்களானது பின்பற்றிருக்காததுடன் இது தொடர்பிலான தரவுத்தளமானது அதிகாரசபையில் இல்லாதிருந்தமையால் அத்தகைய வேலைக்கமர்த்தல்களின் எண்ணிக்கையின் சரிப்படுத்தல்களானது கணக்காய்வில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஈ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் 4 ஆராய்ச்சிகள் மற்றும் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு ரூபா 1.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஒரேயொரு கற்கை மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நபர்கள் பெற்ற தொழில்சார் பயிற்சி தொடர்பான மூன்றாந்தர கற்கை குருணாகல், அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள் - 2014/2015 தொடர்பிலான ஆராய்ச்சிகள் 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அதிகாரசபையின் அறிவுறுத்தாளர்கள் ஏன் சேவையிலிருந்து வறிதானார்கள் என்பதற்கான காரணங்களிற்கான விசாரணை கற்கை மற்றும் இறுதி மதிப்பீட்டில் அதிகாரசபையின் பயிற்சியை பூர்த்தி செய்த பயிற்றுவிக்கப்பட்ட நலனாளிகளின் பங்குபற்றலானது குறைவதற்கும் சான்றிதழ்களை பெறுவதற்குமான போக்குகள் குறைவதற்கான காரணங்களை இனங்காணல் தொடர்பிலான ஆராய்ச்சி கற்கைகளும் 2017 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு இருந்ததுடன் ஆனால் அத்தகைய கற்கைகளை ஆரம்பகட்டத்திலிருந்தது.

(iv) 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத 05 சாத்தியவளக் கற்கைகள் மீளாய்வாண்டின் போது திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவால் நடாத்தப்பட்டிருந்தது. ஆராய்ச்சி பிரிவின் பிரதான நோக்கமானது தொழில்சார் பயிற்சி துறையில் காலரீதியான தேவைப்பாடுகளை இனங்காண்பதன் மூலம் ஆராய்ச்சி மற்றும் கற்கைகளை நடாத்துவதற்கு இருந்த போதிலும், போதிய கவனமானது இது தொடர்பில் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ஏனைய மாவட்டங்களில் காணிகளை புனரமைப்பதற்காக ரூபா ஒரு மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,098,601 தொகையை செலவழிப்பதன் மூலம் ஹிங்குறான்கொட தொழில்சார் பயிற்சி நிலையம், நாரயன் பிற்றியவிலுள்ள தேசிய நிலையம் மற்றும் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள காணிகளின் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்து. ஒதுக்கப்பட்ட தொகையை விஞ்சி ரூபா 1,098,601 செலவழிக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின்போது இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை மற்றும் அதனுடைய மாவட்ட நிலையங்களின் தலைமை அலுவலகத்தில் பாதுகாப்பு சேவைகளிற்காக வேலைக்கமர்த்தப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 5 தொடக்கம் 28 நாட்கள்வரையிலான வீச்சிலான காலப்பகுதிக்காக தொடர்ச்சியாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். ஆகையால், எதிர்பார்க்கப்பட்டவாறு பாதுகாப்பு உத்தியோகத்தரின் சேவையை செயலாற்ற முடிந்திருக்கவில்லையெனவும் இது ஊழியர் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக இருக்க முடியும்.

(ஆ) 2017 பெப்பரவரி 20 இல் மோட்டார் சைக்கிளால் விபத்தை ஏற்படுத்தும் மூன்றாம் தரப்பினருக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் சபையின் நிதியத்திலிருந்து ரூபா 322,232 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் நட்டத்தின் பெறுமதி உரிய காப்புறுதி கம்பனியிடமிருந்து மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் ஊழியர்களின் சார்பில் 2006 இலிருந்து 2015 மே காலப்பகுதிக்காக வாழ்க்கைப்படி செலவினம் தொடர்பான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 3 சதவீத பங்களிப்பாக ரூபா 27,098,089 கொடுப்பனவை மேற்கொள்ள தாமதமானதால், 2017 யூலை 7 இல் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையால் ரூபா 13,549,044 மிகைக் கட்டணம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்த தாமதத்திற்காக பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து இந்தப் பணம் அறவிடப்பட வேண்டுமென 2016 ஆம் ஆண்டில் தேசிய பாதீட்டின் பணிப்பாளர் நாயகமானவர் அறிவித்திருந்தார். அதற்கிணங்க், கூறப்பட்ட மிகையறவீடு அத்தகையை முறையில் அறவிடப்பட வேண்டுமென அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தர் அறிவுறுத்தியிருந்தார். இருந்த போதிலும், அதிகாரசபையால் இனங்காணப்பட்ட அவ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இருந்த போதிலும், அதிகாரசபையில் மிகையறவீடு கொடுப்பனவிற்காக எந்தவொரு பாதீட்டு ஏற்பாடும் இருக்கவில்லையால் நிதிப்பிரிவானது 2018 யூலை 24 இல் 02 ஆம் இலக்க சபைப்பத்திரத்தை போட்டிஇருந்ததுடன் கொடுப்பனவுகளை 12 தவணைக்கட்டணங்களில் பூர்த்தி செய்வதற்கு அனுமதியை தேடியது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் துணைத் தலைவரிற்காக 2017 ஒக்தோபர் 27 இலிருந்து 2017 நவம்பர் 27 வரையான காலப்பகுதியின் போது வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மோட்டார் வாகனமொன்று பெறப்பட்டிருந்தது. வாகன ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரயாண தூரத்தை மிஞ்சி 601 கிலோமீற்றர்களிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமையால், ரூபா 21,035 மேலதிகக் கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும், ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் மோட்டார் வாகனம் 2017 நவம்பர் இல் செயற்படுத்தப்பட்டிருக்காத போதிலும், 780 லீற்றர்கள் எரிபொருளிற்காக ரூபா 74,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் தலைவருக்கு மோட்டார் வாகனமொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் வாகனமானது ரூபா 90,000 மாதாந்த வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்டிருந்தது. தலைவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி மிகையாக எரிபொருள் வழங்கல்களிற்காக ரூபா 54,267 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களானது நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,576 மில்லியன் கிரயமான சொத்துக்களின் 9 வகைகளுக்குரிய நிலையான சொத்துக்களின் 185,948 உருப்படிகள் இருந்த போதிலும், தனியான உருப்படியை பௌதீக ரீதியில் இனங்காண்பதற்காக கோடிடல் முறைமையானது அதிகாரசபையால் பயன்படுத்திருக்காமையால் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை தீர்மானிக்க முடிந்திருக்கவில்லை.

(ஈ) பயிற்சி, உபகரண கொள்வனவிற்காக 2011 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியின்போது மூன்றாந்தர மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் கொடுக்கப்பட்ட ரூபா 10,427,342 தொகையானது அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அதற்கு பதிலாக நிதிக்கூற்றுக்கள் கொடுப்பனவு மீதிகளாக காட்டப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 112,627 தொகையான கொண்டுவரப்பட்ட மீதியானதும் ரூபா 1,500,000 கிரயமானதுமான அசோக் லேய்லான்ட் பேரூந்தானது இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் அனுராதபுர மாவட்ட அலுவல இடங்களில் இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,100,000 கிரயமானதும் ரூபா 82,593 தொகையான கொண்டுவரப்பட்ட மீதியுமான இன்னொரு அசோக் லேலன்ட் பேரூந்தானது பயன்படுத்தப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக அம்பாறை நிண்டவூர் தொழில்சார் பயிற்சி நிலையத்தின் இடங்களில் தரித்துவிடப்பட்டிருந்தது.

(ஆ) காலி மாவட்ட கொஹ்ஹல தொழில்சார் பயிற்சி நிலையத்தால் பாரிய வாகனங்கள் பயிற்சிக்காக விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காததுடன் பயிற்சி நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்காததால் 2016 ஆம் ஆண்டில் பயிற்சி நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்ட பஸ் ஒரு வருடத்திற்கு மேல் பயிற்சி நிலைய இடங்களில் தரித்து வைக்கப்பட்டிருந்து விளைவற்றிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மே 05 ஆந் திகதி முதல் இந்தப் பதவியின் முழுநேர பதில் கடமைக்காக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 03 இலிருந்து அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையால் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவியானது 2015 மே இலிருந்து வெற்றிடமாகவிருந்ததுடன் அதிகாரசபையானது அந்தப்பதவியின் தகுதி வாய்ந்த நிரந்தர உத்தியோகத்தரை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,433 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 1,876 ஆனமையால் வெற்றிடங்கள் 557 ஆகக் காணப்பட்டது. வெற்றிடங்களில் 441 விரிவுரையாளர்கள் இருந்தமையினால் இலக்கிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கையை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. இரண்டாந்தர மற்றும் முதலாம் தர மட்டத்திலுள்ள 149 பதவியணியின் ஆட்சேர்ப்புக்களின் திட்டத்தை அங்கீகரிக்கையில் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு தனித்துவம் கொடுக்கபட்டதுடன் அந்தப் பதவிகளின் உள்ளபடியான எண்ணிக்கை 98 ஆகவிருந்தது.

## 5. நிலைபெறுதகு அபிவிருத்தி

### 5.1 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

ஒவ்வொரு அரச நிறுவகமும் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான ஐக்கிய இராட்சியத்தின் 2030 நிகழ்ச்சிதிட்டத்திற்கிணங்க நடாத்தப்பட வேண்டிய போதிலும், இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபையானது அதிகாரசபையின் எல்லையின் கீழ் வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வாறு நடாத்தப்பட வேண்டுமென கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். எனவே தான் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பகுதி 7 இல் குறிப்பிடப்பட்டவாறு உள்ளக கணக்காய்வு பிரிவை ஸ்தாபிப்பதன் மூலம் நோக்கங்களினை அடைதலானது எதிர்பார்க்கப்படுகின்றது. மீளாய்வாண்டின் போது 12 உத்தியோகத்தர்களை உள்ளடக்கி உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல், அதற்காக பின்தொடர் நடவடிக்கைகளை அமுல்படுத்தல் மற்றும் முன்னைய கணக்காய்வு வேலைகளினை ஈடுபடுத்தல் போன்ற குறைபாடுகளால் அத்தகைய பிரிவை செயற்படுத்துவதில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களானது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செய்முறை

#### 6.2.1 பெறுகைகள்

(அ) 2006 அரச பெறுகை வழிகாட்டிகளின் 6.3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், விலைமனு திறத்தல் பொறுப்பானது பெறுகை குழுவினுடையதாகவிருந்த போதிலும், 06 விலைமனு திறத்தலானது அதிகாரசபையின் பணிப்பாளரால் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) நியமிக்கப்பட்ட விலை மனு திறத்தல் குழுவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. என கணக்காய்வு தெரிவு செவ்வையில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெல்லவாயவற்ற பயிற்சி நிலையத்தின் திருத்தங்களிற்கான இணங்கப்பட்ட ஒப்பந்த காலப்பகுதியானது 2017 யூன் 10 இல் உள்ளவாறு இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் 2006 இன் பெறுகை வழிகாட்டிகள் 5.4.8(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் முறையின் காலப்பகுதியை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 இன் அரச பெறுகை வழிகாட்டிகளின் பெறுகை வழிகாட்டி 2.7.5 இன் பிரகாரம், பாட அறிவுடனான நபரொருவர் திணைக்கள பெறுகை குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் பாடவிடயத்தின் அறிவுடனான உத்தியோகத்தரொருவர் வெல்லவாயவற்ற மாவட்ட பயிற்சி நிலைய ஒப்பந்தத்தின் திருத்தங்களின் பெறுகை குழுவில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) போட்டியிடல் விலைமனுக்களை கோருவதன் மூலம் வெளித்தரப்பினருக்கு சிற்றுண்டிச்சாலையை குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டுமென போதிலும் நாராயன்பிற்றியவிலுள்ள தேசிய தொழில்சார் பயிற்சி நிறுவனத்தின் பிரதம பணிப்பாளரானவர் அறிவுறுத்திருந்த போதிலும், அதற்கான தொழில்நுட்ப மதிப்பீடு குழுவின் நியமனமானது 7 மாதங்கள் காலதாமதமாகியது என 2017 சனவரி 23 இல் அதிகாரசபையின் பணிப்பாளருக்கு (நிர்வாகம்) அறிவித்திருந்தார்.

(உ) விலைமனுக்கள் கோரிய பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் சிபாரிசுகளுடன் 2017 நவம்பர் 20 இல் பெறுகை குழுவிற்கு வழங்குனர் பெயரிட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைக்குழுவின் தீர்மானமானது 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் கொடுக்கப்பட்டிருக்காததுடன் தீர்மானங்களை வழங்குவதிலுள்ள தாமதங்களிற்கான காரணங்களாக கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்காமையினால் புதிய வழங்கனர் 2018 ஆகஸ்ட் 31 வரையான கணக்காய்வுத் திகதி வரையிலும் தெரிவு செய்யப்பட்டிருக்காததுடன் சிற்றுண்டிச்சாலையானது பழைய வழங்குனரால் அவரால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பெறுகை செய்முறையிலிருந்து விலகி 2011 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆகஸ்ட் 31 ஆன கணக்காய்வுத் திகதி வரையிலும் சிற்றுண்டிச்சாலையை நடாத்திய சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு விடுபவர் சட்டத்தில் வேண்டப்பட்டவாறு சிற்றுண்டிச்சாலையை செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பமானது கொடுக்காமையால் அதிகூடிய வாடகையை சமர்ப்பித்திருந்ததுடன் அதிகூடிய வாடகையை சமர்ப்பித்திருந்தார் என குறிப்பிட்டு 2017 திசெம்பர் 05 இல் அதிகாரசபையின் உபதலைவருக்கு வணிகப்பிரிவு சான்றிதழொன்றில்லாமல் கடிதமொன்றை எழுதினார். 2006 இன் அரச பெறுகை வழிகாட்டி 1.4.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை செயன்முறையின் இரகசியத்தன்மையானது பாதுகாக்கப்பட வேண்டிய போதிலும், பெறுகை தீர்மானங்களினை கொடுக்க முன்னர் வெளித்தரப்பினர்களிற்கு விலைமனுவை வழங்கும் செயன்முறை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தாமையால் உரிய தரப்பினர்கள் பெறுகை செயன்முறையின் இரகசியத் தன்மையை பாதுகாத்திருக்கவில்லை.

### 6.2.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெல்லவஹற்ற பயிற்சிநிலையத்தின் நவீனமயப்படுத்தலிற்காக 2016 ஆகஸ்ட் 19 இல் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், நிர்மாண வேலைகளானது 2017 யூன் 10 அளவின் பூர்த்தியாக்கப்பட்டு முடித்திருக்கலாம் எனினும், 124 நாட்கள் தாமதத்தின் பின்னர், குறைபாடுகள் சீராக்குவதற்காக 2017 ஒக்தோபர் 11 இல் அதிகாரசபையானது கட்டிடத்தை கையேற்றமையால் மொத்த தாமதக் கட்டணங்களானது சில நாட்கள் காலதாமதத்தின் பின்னரும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மிரிஜ்ஜவில தேசிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வேலைத்தளக் கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 42,613,557 பெறுமதிக்கு 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் அத்திகதியிலுள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 19,353,158 தொகையானதுடன் அத்திகதியில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராரமையால் அதிகாரசபையினால் 2015 சனவரி 05 ஆந் திகதி முதல் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த தீர்மானத்திற்கு உடன்படாத ஒப்பந்ததார கம்பனி இணக்கச் சபையொன்றிற்கு இந்த சம்பவத்தை முன்வைத்திருந்தது. அதிகாரசபையினால் 2015 ஒக்தோபர் 25 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்த இறுதி பட்டியலிற்கமைய ஒப்பந்த கம்பனியிடமிருந்து ரூபா 3,819,000 தொகை மீள அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்காக 2016 ஏப்ரல் 08 ஆந் திகதி மீண்டும் விலைக்கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், நிர்மாணம் மேற்கொண்ட ஆரம்ப ஒப்பந்ததாரர் தொடர்பில் இறுதித் தீர்மானமொன்றிற்கு வந்திராமையால், இரண்டாவது முறையாக கோரப்பட்ட விலைக்கேள்வி கோரலின் மதிப்பீட்டு பணிகள் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி இடம்பெற்ற பெறுகைகள் குழுவினால் இடைநிறுவத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2017 திசெம்பர் 31 இல் ஒப்பந்தத்தின் நிர்மாண பணிகள் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தாமதமடைந்திருந்தது.

(இ)

(i) திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 180 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு மாத்தளவிலுள்ள கைக்கவல மாவட்ட பயிற்சி நிலையத்தின் நவீனமயமாக்கலிற்காக ரூபா 17,679,003 இற்காக 2017 ஏப்ரல் 25 இல் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இரும்பு கெண்டைகள் பொருத்தப்பட்ட கொங்கிறீட்டின் பகுதியினை நவீனமயப்படுத்திக்

கொண்டிருக்கும் போது பாதுகாப்பற்ற ரீதியில் அகற்றப்பட்டதுடன், அனுபவம் வாய்ந்த மேற்பார்வையாளர்களின் முறையான மேற்பார்வையில்லாமல் பழைய கட்டிடமானது சேதமடைந்ததுடன் அதிகாரசபையின் நிர்மாணப் பிரிவின் பணிப்பாளரால் 2017 யூன் 08 இல் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. மூல மதிப்பீடுகளை தயாரிக்கையில், செங்கல் நிரல் மீது கொங்கிறீட் கற்கைளை கட்டியெழுப்புவதற்கும் அதன் மீது இரும்பு கெண்டையை பொருத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. எனினும், புதிய கொங்கிறீட் நிரலானது கூரை அகற்றப்பட்ட போது நிரல்கள் சேதமடைந்தமையால் புதிய கொங்கிறீட் நிரலானது நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, ரூபா 1,707,900 நிச்சயமான காசு எல்லையான 10 சதவீதத்தினுள் ரூபா 1,170,000 கிரயத்தில் புதிய கொங்கிறீட் தூண்களை மேற்கொள்வதற்கு தலைவரின் அனுமதி பெறப்பட்டது. ஆனால், பெறுகைக் குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்தக்கடமையை ஆற்றியிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து சமரசரீதியில் இந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதகமான காலநிலை நிலைமை, இனங்காணப்படாத கிராமங்கள் அச்சுறுத்தல்களால் வேலையாட்களால் சேவை செய்வதற்கு தயங்கியமை, மேலதிக வேலைகளிற்காக மேலதிக பணத்தை கொடுக்காமை, கூரையினை மாற்றுவதற்காக தகவல்களை வழங்குவதிலுள்ள காலதாமதங்கள் போன்ற காரணங்களால் மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்தின் கொங்கிறீட் காலப்பகுதியானது ஒப்பந்தகாரரின் வேண்டுதலின் பிரகாரம் 2018 ஏப்ரல் 10 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த காலப்பகுதியை நீடிப்பதற்காக முறையான ஆலோசனை சேவையை வழங்காமை, வடிவமைப்பதில் முறையாக எல்லைகளை இனங்காணாமை, வடிவமைப்புகளை சமர்ப்பிப்பதிலுள்ள காலதாமதங்கள் இந்த நிலைமையை ஏற்படுத்தியது என அவதானிக்கப்பட்டது.

(iii) நிர்மாண காலப்பகுதியானது 2018 சனவரி 31 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும், தேவையான வேலைப்படையானது செயற்திட்டம் தொடங்கியதிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் ஆலோசனை நிறுவனம் மற்றும் அதிகாரசபையானது நேரத்திற்கு நேரம் ஒப்பந்தகாரரை அறிவித்திருந்த போதிலும், தேவையான மூலப்பொருட்கள் சரியாக நேரம் வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால், செயல்முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டவாறு நிர்மாணச் செயன்முன்னேற்றம் 60 சதவீதமாக மாத்திரம் இருந்ததுடன் நிர்மாண வேலைகள் 2018 யூலை 31 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ)

(i) அஹின்ஹம ஹொட்டல் பாடசாலையின் நவீனமயப்படுத்தலிற்காக ரூபா 110,355,000 பெறுமதியில் 2014 ஒக்தோபர் 24 இல் ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டிருந்ததுடன் வேலைகளானது 240 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும், இது பூர்த்தி செய்யப்பட்டு 2017 திசெம்பர் 31 வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. நீச்சல் தடாகத்துடன் ஆடம்பர அறைகளாக நவீனமயப்படுத்தப்பட்ட 13 அறைகளுடன் முழுமையாக உபகரணமிடப்பட்ட ஹொட்டலானது நேரத்திற்குநேரம் வடிவமைப்புக்களை மாற்றுவதன் மூலம் நவீனமயப்பட்டுத்தப்பட்டிருந்தது.

(ii) ஆரம்ப திருத்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காதிருந்த சமையலைறையை தொடர்ச்சியாக நவீனமயப்படுத்தலிற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் வேலையானது 2018 சனவரி 12 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டுமென 2017 திசெம்பர் 23 இல் ரூபா 4,920,314 பெறுமதியில் வேறொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன்

அதிகாரசபையானது தேவைப்பட்டவடிவமைப்புக்களை வழங்காமையால் அறிவுறுத்தல்களால் நிர்மாணத் தாமதத்தின் ஏற்படுத்தப்பட்டதுடன் காலப்பகுதியானது 2018 யூன் 05 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது.

(iii) திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்ட நிதியங்களின் கீழ் 162,707,530 தொகையான ஒப்பந்த பெறுமதியில் தனிப்பட்ட இடத்திற்கு அருகில் ஹோட்டல் பாடசாலையொன்றை நிர்மாணித்தலானது 2017 பெப்ரவரி 02 இல் தொடங்கியதுடன் 2018 ஆகஸ்ட் 01 இல் வேலையானது அவ்வாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.அதிகாரசபையின் மற்றும் திறன்கள துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்திருக்க முடியாமையால் 2014 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட நான்கு பாடநெறிகள் 2018 ஆம் ஆண்டிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க முடிந்திருக்கவில்லை.

(உ) ஹோட்டல் பாடசாலையில்பயிற்சி பாடநெறிகளை தொடங்குவதற்கு திட்டமிடப்படாமையால், வெதுப்பகம், உணவக ஊழியர்கள், ஸ்டுவர்களிற்கான, சமையல் பாடநெறிகள் போன்றவற்றிற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 10,931,904 பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் அதிகாரசபையிலும் கொள்வனவு செய்யப்பட்டு காலி மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டது. அத்தகைய பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக போதியளவு வசதி இல்லாமையால் நவீனமயமாக்கல் நடைபெற்றுக்கொண்டிருந்த 3 தொழில்சார் பயிற்சி நிலையங்கள் மற்றும் நவீன ஹொட்டல் பாடசாலை இடங்களில் அவை பயன்படுத்தப்படாமலும் பாதுகாப்பற்ற ரீதியில் பிரத்தியேக முறையினாலும் அந்தப் பொருட்கள் வைக்கப்பட்டு விளைவற்றிருந்தது என 2018 மே 05 இல் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பில் மேற்கொள்ளப்பட்டது. சில பொருட்களிற்கான உத்தரவாதக் காலப்பகுதி கடந்திருந்ததுடன் படுக்கை துணி, துவாய்கள் ஏனையவை போன்ற பொருட்களும் பாதுகாப்பற்றரீதியில் இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக அத்தகையபொருட்கள் காலி மாவட்டத்தின் இருப்பு புத்தகங்களுக்கு பதிவிடப்பட்டிருக்காததுடன் பொருட்களின் அளவையானது 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலும் அளவை சபையால் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 6,767,868 பெறுமதியான ஹொட்டல் உபகரண இருப்பானது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,758,049 பெறுமதி தளபாடம் அஹஙஹம ஹொட்டலிற்கு கொடுக்கப்பட்டிருந்தது. நவீனமயப்படுத்தல் பூர்த்தியாக்கப்பட்டிருக்காமை மற்றும் ஹொட்டலை செயற்படுத்துவதற்கான அறிவு அதகாரசபையில் இல்லாமையால் அத்தகைய பொருட்கள் மற்றும் உபகரணம் விளைவற்றதாகவிருந்தது. தென் மாகாண சுற்றுலா பணியகத்திற்கு சொந்தமாக காணியில் ஹொட்டல் நிர்மாணிக்கப்பட்டதுடன் உடன்படிக்கையின்பிரகாரம காணியானது பயிற்சிநிலையத்தை செயற்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டதல் ஹொட்டலை செயற்படுத்துவதற்குரிய இயலுமை கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாகவிருந்தது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய பாதீடானது செலவினத்தை ஏற்படுத்திய பின்னர் 2018 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்தும், அதற்கான கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் 2018 பெப்ரவரி 27 இல் பெறப்பட்டிருந்தது. அதற்கிணங்க, செலவினத்தை ஏற்படுத்துகின்ற போது காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு பாதீட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால், பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவம் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதிடப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதன செலவினத்திற்குமிடையிலும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 14 சதவீதம் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவ நிதிக்கட்டுப்பாட்டின் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

எனது முன்னைய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் குறைபாடுகள் தொடர்பில் அதிகாரசபையால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) அதிகாரசபைக்கு சொந்தமான கப் ஆனது 2003 ஆம் ஆண்டின் போது விபத்தொன்றை சந்தித்ததுடன் அதனை விசாரிப்பதற்கான குழுவானது 2009 பெப்ரவரி இல் 06 மாதங்களின் பின்னரே நியமிக்கப்பட்டிருந்தது. விசாரணை அறிக்கையின் பிரகாரம், விபத்தால் ஏற்பட்ட ரூபா 421,000 நட்டத்தில் சாரதியிடமிருந்து ரூபா 185,333 தொகையும் மிகுதி ரூபா 235,667 ஏனைய 4 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ரூபா 135,000 பெறுமதியான உதிரிப்பாகங்களின் நட்டம் வாகனங்களிற்கு பொறுப்பான அலுவலகர்களிடமிருந்தும் அறவிட வேண்டியிருந்தது. எனினும், அத்தகைய பிரேரணைகள் 2017 ஒக்தோபர் 30 இலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணங்களின் பிரகாரம், 2015 வரையிலும் வாகனங்களின் விபத்து தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் வாகனமானது திருத்தும் நிலையிலிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் உலக சுற்றுலா தின விழாவிற்காக ‘‘சலசின்’’ நிறுவகத்திற்கு இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திடமிருந்து ரூபா 7,500,000 தொகையொன்று 2012 பெப்ரவரியில் பெறப்பட்டது. உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்ட பின்னர் ரூபா 1,000,000 மிகுதிப் பணமானது 2015 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் அனுமதியில்லாமல் அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான அனுமதியை பெறுவதற்கு மீளாய்வாண்டின் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) போலியான பற்றுச்சீட்டை அடிப்படையாக கொண்டு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 09 ரோனர்களின் கொள்வனவிற்கு 02 சந்தர்ப்பங்களில் ரூபா 101,650 தொகையொன்றை கேகாலை மாவட்ட செயலகம் செலுத்தியிருந்தது. பொருட்களானது களஞ்சியங்களிற்கு பெறப்பட்டிருக்காத போதிலும், முகாமைத்துவத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பெறுகைகளாக அவை களஞ்சியப் பதிவேடுகளிற்கு பதிவிடப்பட்டிருந்தது. காசோலைகளானது கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்காத வேறொருவரின் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காசோலை வழங்கும் உத்தியோகத்தர்களினதும் காசோலைகளை கொள்வனவு செய்யும் மற்றும் கையாளும் பெண் உத்தியோகத்தரின் இணைப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையானது ஆரம்ப விசாரணையை நடாத்தி முடித்திருந்த போதிலும், இறுதி விசாரணையானது 2018 யூலை 31 வரையிலும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 வரையான காலப்பகுதியின் போது காசு மோசடிகளின் மீது 2011 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்ட மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு அனுமதியில்லாமல் ரூபா 1,711,961 கூட்டுத்தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | - ஆட்சேர்ப்பில் ஆகக் குறைந்த தகைமையைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை. |
| | - வெற்றிடங்களிற்காகவும் பதிலீட்டு அடிப்படையில் இணைந்துள்ள உத்தியோகத்தர்களிற்கும் பதிலாக நீண்டகாலமாக நிரந்தர உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்தாமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | - முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாமை |
| | - சொத்துக்களை இனங்காணும் குறியீடுகள் பயன்படுத்தப்படாமை |
| | - விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை |
| | - சகல சொத்துக்களும் பொருட்பதிவேடுகளுக்கு எடுக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை. |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | - உள்ளகக் கட்டுப்பாடொன்று ஏற்படும் வகையில் பணிப்பொறுப்புக்களை உத்தியோகத்தர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிராமை. |
| | - மேற்பார்வை நடவடிக்கைகள் பிரத்தியேக முறையில் அமுல்படுத்தப்படாமை |
| (ஈ) கணக்கீடு | - முறையான அனுமதியில்லாமல் நாளேடுகளை மாற்றியமை |
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | - செயலாற்றல் முறிகளானது காலாதியடைவதற்கு முன்னர் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | - நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களிலுள்ள காணிகளின் குறிப்பிடப்பட்ட எல்லைகள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு வசதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்காமை |
| | - ஒப்பந்த வேலைகள் மேற்பார்வை செய்யப்படாமை. |
| (ஊ) செயலாற்றல் | - செயலாற்றல், இலக்குகள், இணக்கம் மற்றும் முரண்களிற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமை. |